2010 ஏப்ரல் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், இதுகுறித்து நான் என்னுடைய முடிவைச் சொன்னதற்குப் பிறகுதான் உங்களுக்கு அந்த வாய்ப்பு வரும். என்னுடைய முடிவைச் சொல்வதற்கு முன்பு திரும்பத் திரும்ப அதை நீங்கள் raise செய்வதால் எந்தவிதப் பிரயோஜனமும் இல்லை. உட்காருங்கள்.

(இ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் பஜாரில் சமூக விரோதிகளினால் பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன், சொல்லுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் சில சமூக விரோதிகள் பஜாருக்குள் நுழைந்து நகைக் கடைகளையெல்லாம் அடித்து நொறுக்கி 6 பேரை காயமுறச் செய்து, அவர்கள் எல்லாம் மருத்துவமனையில் சிகிச்சை பெறுகின்ற காரணத்தினால் நேற்றிலிருந்து வியாபாரிகள் எல்லாம் கடை அடைப்புச் செய்து, போராட்டத்திலே குதித்திருக்கிறார்கள். சட்டம்-ஒழுங்கு அந்த இடத்திலே கொஞ்சம் நிலை தடுமாறுகின்ற காரணத்தினாலே, நான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனத்திற்கும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் கவனத்திற்கும் கொண்டு வந்து, எப்படியாவது அந்த இடத்தில் காவல் துறையைக் கொஞ்சம் சட்டத்தை சரியான முறையில் செயல்படுத்த வைத்து, கடை வியாபாரிகளையெல்லாம் சமூக விரோதிகள் அடித்து நொறுக்கக்கூடிய நிலையிலிருந்து அவர்களைக் காப்பாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் — தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வேல்முருகன், உங்கள் கட்சி சார்பாக திரு. ஜி.கே. மணி அவர்கள் பேசிவிட்டார்கள். Please உட்காருங்கள். (குறுக்கீடு) அவ்வளவுதான். (குறுக்கீடு) மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.